# பொதுக்காலத்தின் இருபத்தைந்தாம் ஞாயிறு

மூன்றாவது திருவழிபாடு ஆண்டு

**இன்றைய வாசகங்கள்:**

**ஆமோ 8:4-7, 1 திமொ2:1-8, லூக்கா 16:1-13**

## திருப்பலி முன்னுரை:

பொறுப்புக்குரியவர்களே, பொதுக்காலத்தின் இருபத்தைந்தாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். நேரிய உள்ளத்துடன் ஆண்டவருக்கு பணிவிடை புரிய இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. ஆண்டவரின் கட்டளைகளை கடைபிடித்து வாழ்பவர்களாகவும், அதன் வழியாக நற்செய்தியைப் பறைசாற்றுபவர்களாகவும் திகழ நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். உலகெங்கும் கிறிஸ்துவின் அரசை நிறுவும் பொறுப்பு நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. நமது தலைவர் இயேசுவின் விருப்பத்தை திருச்சபையிலும், சமூகத்திலும் நிறைவேற்றும் பொறுப்பை உணர்ந்து வாழ்வது நம் கடமை. ஆண்டவரின் திருவுளத்தை பொறுப்புடன் நிறைவேற்றும் நேர்மையுள்ள பணியாளர்களாக வாழும் அருள் வேண்டி, இத்திருப்பலியில் பங்கேற்போம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. வழிகாட்டும் தலைவரே இறைவா,**

உமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் தங்கள் பொறுப்பை உணர்ந்து, உம் திருவுளப்படி உண்மையுடன் பணியாற்ற அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**2. உலகாளும் அரசரே இறைவா,**

உலக நாடுகளை ஆட்சி செய்யும் தலைவர்கள், மக்களின் வாழ்க்கை நலனுக்கும் இயற்கைச் சூழலின் பாதுகாப்புக்கும் முக்கியத்துவம் கொடுத்து, நீதியுடன் ஆட்சி நடத்த உதவிபுரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**3. வாழ்வளிக்கும் மீட்பரே இறைவா,**

நாட்டை முன்னேற்றப் பாதையில் வழிநடத்தவும், மக்களின் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்யவும், இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும் ஆர்வமுள்ள நல்ல தலைவர்களை எம் நாட்டில் உருவாக்கித் தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**4. நலந்தரும் மருத்துவரே இறைவா,**

பசித் தீர்க்கும் பணியும், குணம் அளிக்கும் பணியும் வியாபாரமாக மாறிவிட்ட இந்த உலகில், அன்பும் நேர்மையும் பெருகவும், வெறுப்புணர்வும் அநீதியும் வன்முறைகளும் ஒழியவும் துணைபுரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**5. தாம் செல்வராயிருந்தும் தம்முடைய ஏழ்மையினால் நாங்கள் செல்வராகுமாறு எங்களுக்காக ஏழையான கிறிஸ்துவை எமக்களித்த தந்தையே!**

நாங்கள் ஒவ்வொருவரும் தாழ்ச்சி என்னும் நற்பண்பை எம்மில் வளர்த்துக் கொள்ளவும், நாம் அனைவரும் நீதியோடும், உண்மையோடும் செயற்படவும், விவேகத்தோடு கூடிய விசுவாசவாழ்வு வாழவும், நல்லுள்ளத்தோடு அனைவருக்காகவும் பரிந்து பேசி செபிக்கவும், உமக்கு இடைவிடாது நன்றி செலுத்தவும் வேண்டிய மனப்பக்குவத்தை எமக்குத் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.